பழமொழித்திரட்டு.

இதில்அடங்கியிருக்கிற
பழமொழிச்சொற்கள்
பெரும்பாலுந் தமிழர் வீடுகளில் வழங்கிவருவதால்
ஐரோப்பியர்களும் அவைகளைக்கற்று
தமிழர்களைப்போலபேசும்படி
அவர்களுக்குபயோகமாய்ப்புனையப்பட்டிருக்கிறது.

காப்பு.

சிற்பரனருளியசீர்பெறுமைங்கரக் ... *
கற்பகக்களிற்றின்கழலிணைபரவுதும் ... *
மழவிடையுகைத்தோன் மலரடிபரவுதும் .. *
பழமொழித்திரட்டைப்பகருதற்பொருட்டே.

அ

அகம்மலிஞ்சால் அஞ்சும்மலியும் அகங்குறைஞ்சால் அஞ்சுங்குறையும்.
அகதிக்குத்தெய்வமேதுணை.
அகதிசொல்அம்பலமேறாது.
அகதிதலையிற்பொழுதுவிடிந்தது.
அகதிபெறுவதுபெண்பிள்ளை அது[illegible]ாடம்.
அகதியைப்பகுதிகேட்கிறதா.
அகத்திலழகுமுகத்திற்றெரியும்.
அகத்திஆயிரங்காய்த்தாலும்புற[illegible]யே.
அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச்சனி ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்துராஜா.
அகலவிருந்தால்நிகளஉறவு கிட்டவந்தால்முட்டப்பகை.
அகோரதபசிவிபரீதநிபுணன்.
அக்கா[illegible]வெட்டிப் பருத்திவிதைத்தால் அப்பா முழச்சிற்றாடையென்கிறதாம்பெண்.
அக்காளிருக்கிறவரையில்மச்சானுறவு.
அக்காளுடைமைஅரிசிதங்கைச்சியுடைமைதவிடா.
அக்காளுறவும் மச்சான்பகையுமா.
அக்காளைக்கொண்டால்தங்கைச்சிக்குமுறைகேட்பானேன்.
அக்காள்தான்கூடப்பிறந்தாள்மச்சானுங்கூடப்பிறந்தானா.
அக்காளைப்பழித்ததங்கைமோசம்போனாள்.
அக்கிரகாரத்தில்பிறந்தநாயானால்வேதமறியுமா.

அக்கிராரத்துநாய்ப்பிரதிஷ்டைக்கழுகதுபோல.
அக்கிராரத்திலொருஆடுசெத்தால்ஆளுக்கொருமயிர்.
அக்கினிமலையிலேகருப்பூரபாணம்பிரயோகித்ததுபோல.
அக்கினிதேவனுக்குஅபிஷேகஞ்செய்ததுபோலிருக்கிறது.
அக்குத்தொக்கில்லாதவனுக்குத்துக்கமென்ன.
அங்காடிவிலையைஅதிரஅடிக்காதே. [ப்பத்தன்.
அங்குந்தப்பியிங்குந்தப்பிஅகப்பட்டுக்கொண்டான் குப்பிட்டி
அங்காங்கனவேபோகமாயிருக்கிறான் அரைக்காசுமுதலில்லை
அங்கிடுதொடுப்பிக்குஅங்கிரண்டுகுட்டுஇங்கிரண்டுசொட்டு.
அங்குமிருப்பாளிங்குமிருப்பாள் ஆக்கினசோற்றிற்குப்பங்கு
மிருப்பாள். [பாய்.
அங்கேண்டிமகளே கஞ்சிக்கழுகிறாயிங்குவாடிகாற்றாய்ப்பறப்
அசலும்பிசலுமரியாமல்அடுத்தாரைக்கெடுக்கப்பார்க்கிறான்.
அச்சமற்றவன்அம்பலமேறுவான்.
அச்சாணியில்லாததேர்முச்சாணுமோடாது.
அச்சியிலுமுண்டுபிச்சைக்காரன்.
அச்சியிலேபோனாலும்அகப்பைஅரைக்காசு.
அஞ்சிலேவளையாததுஐம்பதிலேவளையுமா.
அஞ்சிலறியாதவன்ஐம்பதிலறிவானா.
அஞ்சினாரைக்கெஞ்சுவிக்கும்அடித்தாரைவாழவிக்கும். [ண்டும்
அஞ்சுவயதுப்பிள்ளைக்குஐம்பதுவயதுப்பெண்கால்முடக்கவே
அஞ்சுபணங்[illegible]வித்தனை ஆத்திரமாகாது [குள்ளே.
அஞ்சுமிருக்கிறது நெஞ்சுக்குள்ளே அதுவுமிருக்கிறது புந்திக்
அஞ்சூர்ச்சண்டைப்பிடாரிப்பங்கலவரிசியொருகவளம்.
அஞ்செழுத்தும்பாவனையும்அவனைப்போலிருக்கிறது.
அஞ்சுமூன்றுமுண்டானால்அறியாப்பெண்ணுங்கறியாக்கும்.
அஞ்சுருவுதாலிநெஞ்சுருவக்கட்டிக்கொண்டுவந்தாப்போலவல
க்காரமாய்ப்பேசுகிறாள். [ன்
அஞ்சனக்காரன்முதுகிலே வஞ்சனைக்காரன்யேறினனென்கிறா
அஞ்சுகுஞ்சுகறியாமோஅறியாப்பெண்ணும்பெண்டாமோ.
அஞ்சுவோரைக்கெஞ்சடிக்கப்பார்க்கிறான்.
அஞ்சுருஆணியில்லாத்தேர்அசைவதரிது.
அஞ்சலிபந்தனம்ஆருக்கும்நன்மை. [பு.
அடங்காப்பெண்சாதியாலே அத்தைக்கும்நமக்கும்பொல்லாப்
அடக்குவாரற்றகழுச்காணியும் கொட்டுவாரற்றமேளமுமாய்த்
அடக்கத்துப்பெண்ணுக்குஅழகேன். [திரிகிறான்.

அடாதுசெய்தவர்படாதுபடுவர்.
அடங்கினபிடிபிடிக்கவேணுமேயல்லாமல்அடங்காப்பிடிபிடிக்
அடங்காதபாம்புக்குராஜாமூங்கிற்றடி. [கலாகாது
அடிமைபடைத்தால்ஆள்வதுகடன்.
அடிஒட்டிலேகரணம்போடப்பார்க்கிறான்.
அடிநாக்கிலேநஞ்சும் நுனிநாக்கிலேயமுதுமா.
அடிச்சுவிட்டவன் பின்னேபோனாலும் பிடிச்சுவிட்டவன் பின்
[னேபோகலாகாது.
அடியென்றழைக்கப்பெண்டாட்டியில்லை பிள்ளையெத்தனைபெ
அடியற்றபனைபோலவிழுந்தான். [ண்ணெத்தனையென்கிறான்.
அடிமேலடியடித்தால்அம்மியுநகரும்.
அடிப்பானேன்பிடிப்பானேன் அடக்கிறவழியிலேயடக்குவோ
அடியுதவுகிறாப்போலஅண்ணன்தம்பியுதவுவாரு [ம்.
அடிக்கஅடிக்கப்பந்துவிசைகொள்ளும்.
அடிக்கிறகாற்றுக்கும்பெய்கிறமழைக்கும்பயப்படு.
அடிக்கிறகாற்றுவெய்யிலுக்குப்பயப்படுமா.
அடித்தவனுக்கும்வார்த்தகூழுக்குஞ்சரி.
அடிஅதிரசங்குத்துக்கொழுக்கட்டை.
அடிக்குமொருகைஅணைக்குமொருகை.
அடியாதமாடுபடியாது.
அடித்துவளர்க்காதபிள்ளையும் முறுக்கிவளர்க்காதமீசையுஞ்செ
அடிநொச்சிநுனிஆமணக்கா. [வ்வையாகாது.
அடுக்களைக்கொருபெண்ணும் அம்பலத்துக்கொருஆணுமிருக்
அடுத்துவந்தவர்க்குஆதரவுசொல்வோன்குரு. [குதென்கிறான்.
அடுதுக்கெடுப்பான்கபடன்தொடுத்துக்கெடுப்பாள்மடந்தை.
அடுத்தவன்வாழப்பகலேகுடிகெடுப்பான்.
அடுத்தடுத்துச்சொன்னால்தொடுத்தகாரியம்முடியும்.
அடுப்பெரிந்தால்பொரிபொரியும்.
அடுக்கின் அருமையுடைக்கிறநாய்க்குத்தெரியுமா.
அடுத்தவனைக்கெடுக்கலாமா.
அடுத்தானைக்கெடுத்து அன்னமிட்டானைக்கன்னமிடுகிறான்.
அடுக்களைக்கிணற்றிலேயமுதமெழுந்தாற்போல.
அடுப்புநெருப்பும்போய்வாய்த்தவிடும்போச்சுது.
அடைபட்டுக்கிடக்கிறான்செட்டி அவனையழைத்துவாபணம்பா
[ர்க்கவென்கிறான். [கொண்டது.
அட்டமத்துச்சனிபிடித்து பிட்டத்துத் துணியையும் உரிந்து

அட்டமத்துச்சனிநட்டம்வரச்செய்யும்.
அட்டையையெடுத்து மெத்தையில்வைத்தாலுஞ் செத்தையைச்
அணிமேலேறவிட்டநாய்போல. [செத்தையைநாடும்.
அணைகடந்தவெள்ளத்தைமறிப்பவர்யார்.
அணைகடந்தவெள்ளம் அழுதாலும்வருமா. [டுவா.
அண்ணன்பெரியவன் சிற்றப்பா சுருட்டுக்கு நெருப்புக்கொண்.
அண்ணாமலையாருக்குஅறுபத்திநாலுபூசை ஆண்டிகளுக்குஎழு
பத்திநாலுபூசை.
அண்ணாக்குந்தொண்டையும்அதிர அடைச்சுது.
அண்ணா ஆயிரம்பொன்னிலும்தின்ணா ஒருகாசுபெரிது.
அண்ணாமலையாரருளுண்டானால் மன்னார்சாமி மயிரைப்பிடுங்கு
அண்ணன்தம்பிதான்சென்மப்பகையாளி [மா
அண்ணனைக்கொன்றபழிசந்தையிலேதீர்த்துக்கொள்ளுகிறது.
அண்ணனுக்குப்பெண்பிறந்தால்அத்தைஅசனாட்டாள்.
அண்ணனிடத்திலாறுமாதம்வாழ்ந்தாலும் அண்ணியிடத்திலரை
நாழிவாழலாமா.
அண்ணனார்சேனையிலேஅள்ளியுண்ணப்போகிறான்.
அண்டாதபிடாரிஆருக்கடங்குவாள்.
அண்டைவீட்டுச்சண்டைகண்ணுக்குக்குளிர்ச்சி.
அண்டத்திலில்லாததுபிண்டத்திலுண்டோ.
அண்டத்தைச்சுமக்கிறவனுக்குச்சுண்டைக்காய்பாரமா.
அதிகாரிவீட்டில்திருடித்தலையாரிவீட்டில்வைத்ததுபோல.
அதிகாரிவீட்டுக்கோழிமுட்டை குடியானவன்வீட்டம்மியையு
டைக்கும்.
அதிஷ்டமில்லாதவனுக்குக்கலப்பால்வந்தாலும் பூனைகுடிக்கும்.
அதிஷ்டந்தொட்டக்கழுக்காணி.
அதிஷ்டவான்மண்ணைத்தொட்டாலும்பொன்னாகும்.
அதிஷ்டம்ஆறாய்ப்பெருகுகிறது.
அதிகஆசைமிகுதரித்திரம்.
அதிக்கிரமானவூரிலேகொதிக்கிறமீனுஞ்சிரிக்கிறதாம்.
அதிலேகுறைச்சலில்லை ஆட்டடாபூசாரி.
அதெல்லாம்உண்டிட்டவாவென்பான்.
அதைவிட்டாலுங்கெதியில்லை அப்புறம்போனாலும்வழியில்லை.
அத்தத்தின்மிகுதியல்லவாஅம்பட்டன்பெண்கேட்கவந்தது.
அத்தனையுநேர்ந்தாள்உப்பிடமறந்தாள்.
அத்திப்பழத்தைப்பிட்டுப்பார்த்தால்அத்தனையும்புழு.

அத்திபூத்தாற்போலிருக்கிறது.
அத்துமீறிப்போனான்பித்துக்கொள்ளியானான்.
அத்தைக்குமீசைமுளைத்தால்சிற்றப்பாவென்றுகூப்பிடுகிறேன்
அந்தஞ்சிந்தியழகொழுகுகிறது
அந்துக்கண்ணிக்குஅழுதாலும்வரானும்ஆம்புடையான்.
அந்தணர்மனையில்சந்தனம்மணக்கும்.
அப்பஞ்சுட்டதுதிட்டையிலேஅவலிடித்ததுசட்டியிலே.
அப்பனருமைஅப்பன்மாண்டாற்றெரியும்உப்பினருமைஉப்பி
ல்லாவிட்டால்தெரியும்.
அப்பமென்றாற்பிட்டுக்காட்டவேண்டும்.
அப்பாவென்றாலுச்சிகுளிருமா.
அப்பன்செத்துந்தம்பிக்கழுகிறதா.
அப்பன்சோற்றுக்கழுகிறான் பிள்ளைகும்பகோணத்தில் கோதா
னஞ்செய்கிறான்.
அப்பத்தையெப்படிச்சுட்டீர்களோ தித்திப்பை யெப்படிநு
அப்பியாசவித்தைக்கழிவில்லை. [ழைத்தீர்களோ.
அப்பியாசங்கூசாவித்தை.
அமரிக்கை ஆயிரம்பெறும்.
அமாவாசைப்பருக்கைஎன்றைக்கும்அகப்படுமா
அமுஞ்சியுண்டாகுப்புநாய்க்கமே.
அமுதமுண்கிறவாயால்விஷமுண்பார்களா.
அம்பட்டக்கிருதுவண்ணாரஒயில்.
அம்பட்டன்குப்பையைக்கிண்டினால் மயிர்மயிராய்ப் புறப்படு
அம்பலத்திலேபொதியவிழ்க்கலாகாது. [ம்.
அம்பலத்திலேறும்பேச்சையமுசடக்கம்பண்ணப்பார்க்கிறான்.
அம்மான்வீட்டு வெள்ளாட்டிமயை அடிக்க அதிகாரியைக்கேட்க
அம்பட்டன்பிள்ளைக்குமயிர் அருக்காணியா. [வேணுமா.
அம்பலக்கழுதைஅம்பலிலேகிடந்தாலென்ன அடுத்த..குமாள
[த்திலகிடந்தாலென்ன.
அம்மாளும்மருமகளும்ஒருவீட்டுக்காளடிமை.
அம்பாணிதைத்ததுபோலப்பேசுகிறான்.
அம்மான்தெருவுதற்குமுன்னேஐயர்உருவுவார்.
அம்மைக்குஅமர்க்களம்பொங்கிப்படையுங்கள்.
அம்மையார்பெறுவதணாக்காசுதலைசிரைப்பதுமுக்காற்காசு.
அம்மையார்நூற்கிறநூலுக்கும்பேரனண்ணுக்கயிற்றுக்குஞ்சரி
அம்மிமிதித்துஅருந்ததிபார்த்ததுபோலப் பேசுகிறாள்.

அம்பிமிடுக்கோஅரைப்பவள்மிடுக்கோ.
அம்மியிருந்துஅரணைபழிப்பான்.
அயனிட்டகணக்குஆருக்குந்தப்பாது.
அயனிட்டவெழுத்திலணுவளவுந்தப்பாது.
அயோக்கிபாழ அபரஞ்சிச்சிமிழில்நஞ்சு.
அரகராவென்கிறதுபெரிதோ ஆண்டிக்கிடுகிறதுபெரிதோ.
அரங்கின்றிவட்டாடலும் அறிவின்றிப்பேசலுமொன்று.
அரசனைநம்பிப்புருஷனைக்கைவிட்டதுபோல.
அரசனில்லாப்படைவெட்டுமா.
அரசனுக்கோர்சொல் அடிமைக்குத்தலைச்சுமை.
அரசனுக்கஞ்சிவலியார்எளியார்க்கனுகூலமாகிறது.
அரசனெப்படியோ அப்படிக்குடிகள்.
அரசன்வழிபட்டதவனி.
அரசன்கல்லின்மேல்வழுதுணைகாய்க்குமென்றால்கொத்தாலாயி
ரங்குலைய லாயிரமென்பார்கள்.
அரசனன்றுகொன்றால்தெய்வம்நின்றுகொல்லும்.
அரசனும்அரவுஞ்சரி.
அரசில்லாப்படைவெல்லுவதரிது.
அரவுக்கில்லைசிறுமையும்பெருமையும்.
அரணைஅலகுதிறக்காது.
அரணைகடித்தால்மரணம். [துபோவதில்லை
அரண்மனைவாசல்காத்தவனும் பரிமடைவாசல்காத்தவனும்பழு
அரத்தைஅரங்கொண்டும்வயிரத்தைவயிரங்கொண்டுமறுக்கவே
அரனருளல்லாது அணுவுமசையாது. [ண்டும்.
அரியுஞ்சிவனுமொண்ணு அல்லவென்கிறவன் வாயில்மண்ணு.
அரியென்ற அக்ஷரந்தெரிந்தால் அதிகாரம்பண்ணலாம்.
அரிசிப்பகையும்ஆம்புடையான்பகையுமுண்டா.
அரிசிஆழாக்கானாலும்அடுப்புக்கட்டிமூன்றுவேண்டும்.
அரிசிகொண்டுஅக்காள்வீட்டிற்குப்போவானேன்.
அரிசியென்று அள்ளிப்பார்ப்பாருமில்லை உமியென்று ஊதிப்
பார்ப்பாருமில்லை
அரியதுசெய்துஎளியதுக்கேமாந்துதிரிகிறான்.
அரிதரிது அஞ்செழுத்துணர்த்தல்
அரிவைமொழிகேட்டால்அவத்தனாவான்.
அருக்காணிநாச்சிபார்குரங்குப்பிள்ளையைப்பெற்றாளாம்.
அருக்காமணிமுருக்கம்பூ.

அருமையற்றவீட்டில்எருமையுங்குடியிராது.
அருக்காணிமுத்துகரிக்கோலமானாள்.
அருஞ்சுனைநீருண்டால்அப்பொழுதேரோகம்.
அருங்கோடை திரும்பற்றுப்போகுது.
அருண்டவன்கண்ணுக்குஇருண்டதெல்லாம்பேய்
அருமைமருமகன்தலைபோனாலும்போகட்டும் ஆதிகாலத்துஉர
[ல்போகலாகாது
அரைப்பணங்கொடுத்தழச்சொல்லி ஒருபணங்கொடுத்தோயச்
சொல்வானேன்.
அரைக்காசுக்குப்போனமானம் ஆயிரங்கொடுத்தாலும்வராது.
அரைத்துமீந்தது அம்மிசிரைத்துமீந்தது குடுமி.
அரைச்சொற்கொண்டுஅம்பலமேறினால் அரைச்சொல்லுமுழு
ச்சொல்லாகும்.
அரையிலேபுண்ணு அண்டையிலேகடனுமாகாது.
அலுத்துப்பிலுத்துஅக்காள்வீட்டிற்குப்போனால்அக்காளிழுத்
துமச்சானண்டையிற்போட்டாளாம்.
அல்லற்பட்டழுதகண்ணீர்செல்வத்தைக்குறைக்கும்.
அல்லலொருகாலஞ்செல்வமொருகாலம்.
அல்லலற்றபடுக்கைஅழகிலும்அழகு.
அல்லும்பகலும்கசடறக்கல்.
அவதந்திரந்தனக்கந்தரம்.
அவன்மிதித்தவிடத்திற்புல்லுஞ்சாவாது.
அவலைநினைத்துக்கொண்டுஉரலையிடிக்கிறான்.
அவசாரிக்குவாய்பெரிதுஅஞ்சாறரிசிக்குக்கொதிபெரிது.
அவசாரியாடினாலும்அதிஷ்டம்வேண்டுந்திருடப்போனாலுந்தி
சைவேண்டும். [லாகாது
அவசாரியென்றானைமேலேறலாந் திருடியென்றுதெருவில்வர
அவசாரிக்காணையில்லைதிருடிக்குத்தெய்வமில்லை.
அவசரக்காரனுக்குப்புத்திமட்டு.
அவசரக்கோலம்அள்ளித்தெளி.
அவசரமானாலருக்கன்சட்டியுங்கைநுழையாது.
அவராசுருக்கேஅரிவாண்மணைகருக்கே.
அவசாரிஆம்புடையான்ஆபத்துக்குதவுவான்.
அவன்கெட்டான்குடியன்எனக்கிரண்டுதிராம்வாரு.
அவப்பொழுதிலுந்தவப்பொழுதுவாசி [லது
அவனேஇவனேயென்பதைவிடச்சிவனேசிவனேயென்பதுநல்

அவன்காலாவிட்டவேலையைக்கையாற்செய்கிறேன்.
அவன்காலால்முடிந்ததைக்கையாலவிழ்க்கக்கூடாது.
அவலமாய்வாழ்பவன்சபலமாய்ச்சாவான்.
அவளுக்கிவளெழுந்திருந்தாண்டாள்.
அவன்சாதியெந்தப்புத்திக்குலமெந்தஆசாரமோ அதுதான்வ
அவனுக்குச்சாண்யேறினால்முழஞ்சறுக்குது. [ரும்.
அவமானம்பண்ணிவெகுமானம்பேசுகிறான்.
அவகடமுள்ளவன்அருமையறியான்.
அவத்தனுக்குஞ்சமத்தனுக்குங்காணிகைவையில்லை.
அவன்உள்ளெல்லாம்புண்ணும்உடம்பெல்லாங்கொப்பளமுமா
அவன்மெத்தஅத்துமிஞ்சினபேச்சுக்காரன். [யிருக்கிறான்.
அவன்தொத்திஉரவாடிதோளுக்குமன்றாடுகிறான்.
அவனையவன்பேசவிட்டுப்பேச்சுவாங்கிஆமைமல்லாத்துகிறாப்
போல்மல்லாத்திப்போட்டான். [றாள்
அவசரத்திலேசெத்தபிணத்துக்குப்பீச்சுத்தோடேமாரடிக்கி
அவனருளற்றால்அனைவருமற்றார்அவனருளுற்றால்அனைவருமுற்
அவனென்னைபூதப்பாக்கடிக்கப்பார்க்கிறான். [றார்
அவனுக்குள்ளேயகப்பட்டிருக்குதாளன்பிழைப்பெல்லாம்.
அவசாரிம்பாகவும்ஆசையாயிருக்குது அடிப்பாளென்றும்பய
அவாந்தரத்திலக்கினிபற்றுமா. [மாயிருக்குது.
அவலெட்சணமுள்ளகுதிரைக்குச்சுழிசுத்தம்பார்க்கிறதில்லை.
அவன்ஆகாசத்தைவடுப்படாமல்கடிப்பேனென்கிறான்.
அவகுணக்காரன்ஆவாசமாவான்.
அவனுடையவாழ்வுநண்டுக்குடுவைஉடைஞ்சதுபோலிருக்குது
அற்பசினேகிதம்பிராணகண்டிதம்
அவள்சமத்துப்பானைசந்தியிலேகவுந்தது.
அவள்வலத்தைமண்கொண்டுஒளிச்சுது.
அவனுக்கும்இவனுக்கும்எருமைச்சங்காத்தம்.
அவன்வல்லாளகண்டனைவாரிப்போரிட்டவன்.
அவ்வளவிருந்தாலடுக்கிவைத்துவாழேனா.
அழஅழச்சொல்லுகிறவன்பிழைக்கச்சொல்லுவான் சிரிக்கச்சிரி
க்கச்சொல்லுகிறவன்கெடச்சொல்லுவான்.
அழகுபெண்ணேகாற்றடிபுன்னையழைக்கிறாண்டிகூத்தாடி.
அழகிலேபிறந்தபவளக்கொடிஆற்றிலேபிறந்தசாணிக்கூடை.
அழகுக்கிட்டால்ஆபத்துக்குதவும்.
அழிந்தவளாரோடுபோனாலென்ன.

அழிந்தகொல்லையில் குதிரைமேய்ந்தென்ன கழுதைமேய்ந்தென்ன.
அழிவழக்குச்சொன்னவன்பழிபொறுக்குமன்னவன்.
அழுகிறஆணையுஞ்சிரிக்கிறபெண்ணையும்நம்பக்கூடாது.
அழுவாரற்றபிணமும் ஆற்றுவாரற்றசுடலையும்.
அழுகிறவீட்டிலிருந்தாலும்ஒழுகிறவீட்டிலிருக்கக்கூடாது.
அழுகையும்ஆங்காரமுஞ்சிரிப்புக்கெலிப்பின்பேரிலேதான்.
அழுகிறவேளைபார்த்துஅக்குளுபாய்ச்சுகிறான்.
அழுதபிள்ளைபால்குடிக்கும்.
அழுதவனுக்காங்காரமில்லை.
அழுதாலும்பிள்ளையவளேபெறவேண்டும்.
அழுகிறபிள்ளைக்குவாழைப்பழங்காட்டுகிறதுபோல.
அழுவார்அழுவார்தன்துக்கம்.
அழுக்கையழுக்குக்கொல்லும்இழுக்கையிழுக்குக்கொல்லும்.
அழுக்கைத்துடைத்துமடியிலேவைத்தாலும் புழுக்கைக்குணம் போகாது.
அழையாவீட்டிற்குநுழையாச்சம்மந்தி.
அளகேசனானாலும்அளவறிந்துசெலவுசெய்யவேண்டும்.
அளக்கிறநாழிஅகவிலையறியுமா.
அளந்தளந்தநாழிஒழிஞ்சொழிஞ்சுவரும்.
அளவிற்குமிஞ்சினால்அமுதமும்விஷம்.
அள்ளிப்பால்வார்க்கையிலேசொல்லிப்பால்வார்த்திருக்குது.
அள்ளிக்கொடுத்தாற்சும்மாஅளந்துகொடுத்தாற்கடன்.
அள்ளுவதெல்லாநாய்தனக்கென்றெண்ணுமாம்.
அறவடித்தமுன்சோறுகாடிப்பானையில்விழும்.
அறமுறுக்கினாற்கொடுமுறுக்குப்படும்.
அறக்காத்தான்பெண்டிழந்தான்அறுகாதவழிசுமந்தழுதான்.
அறப்பேசிஉறவாடவேண்டும்.
அறிவேனறிவேன்ஆலிலைபுளியிலைபோலிருக்கும்.
அறிந்தஆண்டையென்று கும்பிடப்போனால் உங்கப்பன்பத்து
பணங்கொடுக்கவேண்டுங்கொடென்றான்.
அறியாமற்றுடிவளர்த்ததுஅம்பட்டன்கையிற்கொடுக்கவா.
அறிஞ்சுங்கெட்டேன் அறியாமலுங்கெட்டேன் சொறிஞ்சுபுண்ணாச்சு.
அறிவாரறிவார்ஆய்ந்தவரறிவார்.
அறிவீனர்தமக்குஆயிரமுரைக்கினுமவம்.
அறிவுடையாரைஅடுத்தால்போதும்.
அறிவில்லாசயனம்அம்பரத்திலுமில்லை.

அறிய அறியக்கெடுவாருண்டா.
அறிவில்லார்தனக்குஆண்மையுமில்லை.
அறுபத்துநாலடிக்கம்பத்தின்மேலாடினாலும்கீழேவந்துதியாக
ம்வாங்கவேண்டும்.
அறுக்கமாட்டாதவனிடையில்ஐம்பத்தெட்டரிவாள்.
அறைக்கீரைப்புழுதின்னாதவனும் அவசாரிகையிற் சோறுண்ணா
தவனுமில்லை
அறையிலேயிருந்தபேர்களை அம்பலமேற்றுகிறமிரட்டன்.
அறையிலாடியல்லவோ அம்பலத்திலாடவேண்டும். [பான்.
அற்பனுக்கயிஸ்வரியம்வந்தால் அர்த்தராத்திரியிற் குடைபிடிப்
அனற்றையில்லாவூரிலேவண்ணாரிருந்துகெட்டார்கள்.
அனுபோகந்துலைந்தால்அவிழ்தம்பலிக்கும்.
அன்பற்றமாமியாருக்குக்கும்பிடுகிறதுங்குற்றந்தான்.
அன்பானசிநேகிதனையாபத்திலேயறி.
அன்னமிறங்குவதுஅபானவாயுவால்.
அன்னியசம்பத்தேயல்லாமல்அத்தசம்பத்துஇல்லையென்கிறான்
அன்னியமாதர்அவதிக்குதவார்.
அன்பில்லார்தனக்குஆதிக்கமில்லை.
அன்னைக்குதவாதான்ஆருக்குமாகான்.
அன்பற்றார்வாசலில்பின்பற்றிப்போகாதே.
அன்றிருக்கலாம்நின்றிருக்கலாகாது.
அன்றுகண்டமேனி[illegible]வில்லை.
அன்றுமில்லைதையல்இன்றுமில்லைபொத்தல்.
அன்றெழுதினவன்அழித்தெழுதுவானா.
அன்றைக்குத்தின்னுகிற பலாக்காயைவிட இன்றைக்குத்தின்னு
அன்னப்பிடிவெல்லப்பிடியாச்சுது. [கிறகிளாக்காய்பெரிது.
அன்னமயப்பிராணமயம்.
அன்ன[illegible]மன்றிப்பின்னைமயமில்லை.
அன்னமிட்டாரைக்கன்னமிடலாமா.
அன்னமொடுங்கினால்அஞ்சுமொடுங்கும்.
அன்னநடைநடக்கப்போய்காகந்தன்னடையையுமிழந்தது.
ஆகடியக்காரன்போகடியாய்ப்போவான்.
ஆகாசத்திலேபரக்கவுந்தேசஞ்சொல்லுகிறேன் என்னை ஆற்றுக்
கப்பால்தாக்கிவிடு என்கிறார்குரு.
ஆகாசவல்லிடியபத்திரஇடித்தது. [ன்னசெய்யும்.
ஆகாதநாளையிலேபிள்ளைபிறந்தால்அண்டைவீட்டுக்காரனையெ

ஆகாசத்தைப்பருந்தெடுத்துக்கொண்டுபோகிறதா.
ஆகாதபஞ்சாங்கத்துக்கு அறுபதுநாழிகையுந்தியாச்சியம்.
ஆகாயம்பார்க்கப்போயும்இடுமுடுக்கா.
ஆகாதவன்குடியைஅடுத்துக்கெடுக்கவேண்டும்.
ஆகுங்காய்ப்பிஞ்சிலேதெரியும். [வாள்
(ஆகுங்குடிக்கு) ஆகிறகாலங்களுக்கு அடியாளும் பெண்பெறு
ஆக்கவேண்டாம் அரிக்கவேண்டாம்பெண்ணே என்னருகிருந்
தாற்போதுமடிகண்ணே.
ஆக்கினையுஞ்செங்கோலுமற்றதனாநாழியிலே.
ஆக்கப்பொறுத்தஉனக்குஆறப்பொறுதா. [தாணிபாழ்
ஆக்கிறவள்சலித்தால் அடுப்புபாழ் குற்றுகிறவள் சலித்தாக்குந்
ஆக்கிற்குழைப்பேன் அரிசியாஇறக்குவேன். [ன்றாள்.
ஆங்காலமெல்லாம்அவசாரியாடிச்சாங்காலஞ்சங்கராசங்கராவெ
ஆங்காலம்ஆகும்போங்காலம்போகும்.
ஆசரித்ததெய்வமெல்லாம்அடிபோடேமாண்டுதென்கிறான்.
ஆசாரப்பார்ப்பான்காசிக்குப்போனனும்பனாயன்கோசந்தலை
[யிலடிபட்டதாம்.
ஆசாரம்இல்லா அசடருடன்கூடி பாசாங்குபேசிபதிஇழந்து
ஆசைக்களவில்லை. [போனேனே.
ஆசைபெரிதோமலைபெரிதோ.
ஆசையுண்டானாற்பூசையுண்டு.
ஆசையவள்மேலேயாதரவுபாய்மேலே.
ஆசைப்பட்டேன்உளசிப்போச்சு.
ஆசைவெட்கமறியாது.
ஆசையுள்ளளவும்அலைச்சலுமுண்டு.
ஆசையறுபதுநாள் மோகமுப்பதுநாள் தொண்ணூறுநாளும்
போனால் துடைப்பக்கட்டை.
ஆசையண்டாதால் அழுகையுமண்டாது.
ஆச்சிஆச்சிமெத்தப்படித்துப்படித்துப்பேசாதே.
ஆடமாட்டாததேவடியாள் கூடம்போதாதென்றாளாம்.
ஆடிக்காற்றிலேயிலவம்பஞ்சுபறந்ததுபோல.
ஆடிக்கறக்கிறமாட்டை ஆடிக்கறக்கவேண்டும் பாடிக்கறக்கிற
மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும்.
ஆடிருக்கஇடையனைவிழுங்குமா.
ஆடிவிதைதேடிப்போடு.
ஆடியகாலும்பாடியநாவும்.

ஆடிக்கருவழிந்தால்மழைகுறைந்துபோம். [ம்.
ஆடிமாதத்திற்குத்தினகுத்து ஆவணிமாதத்திலுலைப்பெடுத்ததா
ஆடுகடிக்குமென்றுஇடையன்உறியேறிப்பதுங்குவானாம்.
ஆடுநனைகிறதென்றுதோண்டானழுகிறதாம்.
ஆடுகிடந்தவிடத்திலேமயிர்தானுங்கிடவாமற்போயிற்று.
ஆடுகொழுக்கிறதெல்லாம்இடையனுக்குலாபம்.
ஆடுவதுமாடிஅவரைக்காயும்பறித்தாச்சுது.
ஆடுசுவறாகுருக்களேகொம்புங்குளம்புந்தவிரசமூலமுமாம்.
ஆடுபழைத்தால்மயிர்தானுங்கொடேன்
ஆடுங்காலந் தலைகீழேவிழுந்தாலுங் கூடும்புசிப்புத்தான்கூடும்.
ஆடுகெட்டவனாடித்திரிவான்கோழிகெட்டவன் கூவித்திரிவான்.
ஆடுநினைத்தஇடத்திற்பட்டிபோடுகிறதா.
ஆடுமொட்டாதஇடையன்ஆவைக்கொடுப்பானா.
ஆடையில்லாதவன்அரைமனிதன்.
ஆடையைத்தின்றால்வெண்ணெயுண்டா.
ஆட்டாளுக்கொருசிட்டாள்அடப்பக்கட்டைக்கொருதுடப்பக்
ஆட்டுக்குவால்அளவறுத்துவைத்திருக்கிறது. [கட்டை.
ஆட்டுக்குத்தோற்ற கிழப்புலியா.
ஆட்டுக்கிடையிலே தோண்டான்புகுந்ததுபோல.
ஆட்டுக்குத்தீர்ந்தபடிகுட்டிக்குமாகிறது.
ஆட்டுத்தலைக்கு ஓச்சன்பறக்கிறதுபோல.
ஆட்டைக்காட்டிவேங்கைப்பிடிக்கப்பார்க்கிறான்.
ஆட்டுவிச்சுப்பம்பைகொட்டுகிறான்.
ஆணழுங்கறியும்அடுக்கோடேவேண்டும். [மை
ஆணிக்கிணங்கினபொன்னும் மாமிக்கிணங்கின பெண்ணுமரு
ஆணுக்கவகேடுசெய்தாலும் பெண்ணுக்குப்பிழை சொல்லக்கூ
ஆணை அடித்துவள பெண்ணைப்போற்றிவள. [டாது.
ஆண்டி[illegible]ப்பான்மடத்திலே சோளிகிடக்குந்தெருவிலே.
ஆண்டியைபடித்தானாமவன்குடுவையையுடைத்தானாம்.
ஆண்டிச்சிபெற்றது அஞ்சுமவலம்.
ஆண்டிக்கிடச்சொன்னால்தாதனுக்கிடச்சொல்லுகிறான்.
ஆண்டியுந்தாதனுந்தோண்டியுங்கயிறும். [னென்கிறான்.
ஆண்டியைக்கண்டால்லிங்கனென்கிறான்தாதனைக்கண்டால் ரங்க
ஆண்டிமகனாண்டியானால்நேரமறிந்துசங்கூதுவான்.
ஆண்டிகள்மடங்கட்டுகிறதுபோல. [மொட்டிக்கொள்ளும்.
ஆண்டியும்ஆண்டியுங் கட்டிக்கொண்டால் சாம்பலும்சாம்பலு

ஆண்டாருக்கும்பரப்புகோவிலுக்குஞ்சிறப்பு.
ஆண்டாரிருக்கமட்டும்ஆட்டுங்கூத்தும்.
ஆண்டிவேஷங்கொண்டும்அலைசசல்தீரவில்லை.
ஆண்மையற்றவீரன்ஆயுதத்தின்மேற்குறைசொல்வான்.
ஆண்டுமாறினகாரும் அன்றறுத்தசம்பாவும் ஆளன் கண்ணுக்கு
ஆண்கேடுஅரசுகேடுஉண்டோ. [அரிது.
ஆகாவற்றவார்த்தையும் ஆணிதிடாவாதகைமரமும் பலன்செய்
ஆதாயமில்லாதசெட்டிஆற்றோடேபோவானா. [யாது.
ஆதியந்தமில்லா அருமைப்பொருளேகர்த்தன்.
ஆஸ்தியில்லாதவன் மனிதனல்ல.
ஆதீனக்காரனுக்குச்சாதனம்வேணுமா.
ஆத்திரமுடையோன்கோத்திரமறிவான்.
ஆத்திரக்காரனுக்குபுத்திமட்டு.
ஆத்திரம்பெரிதானாலும் மூத்திரம்பெரிது.
ஆபத்துஞ்சம்பத்தும்ஆருக்குமுண்டு.
ஆபத்துக்குப்பாவமில்லை.
ஆபத்திற்காத்தவன்ஆட்சியடைவான்.
ஆப்பாத்தாற்கண்ணாலம்போய்ப்பார்த்தாற்றெரியும்.
ஆமணக்குவிதைத்தால்ஆச்சாமுளைக்குமா.
ஆமைகிணற்றிலே அணில்கொம்பிலே.
ஆமைபிடிப்பார்மல்லாத்துவார் நாமதுசொன்னாற்பாவம்.
ஆம்புடையானைக்கொன்ற அறதீவி.
ஆம்புடையான்செத்தபின்பு அறுதலிக்குப்புத்திவந்தது. [ன்
ஆம்புடையானுக்கமுதகுறை அந்துக்கண்ணன்வந்து வாய்த்தா
ஆம்புடையானடித்ததுபெரிதல்ல சக்களத்திசிரிப்பாளென்றழு
கிறேன்.
ஆம்புடையான்செத்து அவதிப்படுகிறபோது அண்டைவீட்டுக்
காரன்வந்து அக்குளில்குத்தினானாம். [சொல்லலாமா.
ஆம்புடையானுக்குப்பொய்சொன்னாலும் அடுப்புக்குப்பொய்
ஆம்புடையானைவைத்துக்கொண்டல்லவோ அவசாரியாடவேண்
ஆம்புடையான்செத்தவளுக்குமருத்துவசியவேல். [டும்
ஆம்புடையான்புலமானாலகுப்பையேறிச்சண்டைபண்ணலாம்
ஆயக்காரனுக்குபிரமாதிக்காரன்சாட்சி.
ஆயவஞ்சனைபிறர்வஞ்சனைஒருவருக்குமாகாது.
ஆயன்அமைப்பைஆராலுந்தள்ளக்கூடாது.

ஆபவுபாயமறிந்தவன்அரிதல்லவெல்வது.
ஆபத்திலும்ஞாயம்வேண்டும்.
ஆபத்துறையில்அநியாயஞ்செய்யாதே.
ஆயிரமுடையார்அமர்ந்திருப்பார்துணிபொறுக்கிதொந்தோந்
தொந்தோமென்றுகூத்தாடுவான்.
ஆயிரம்பட்டும்அவமாச்சுக்கோவிலைக்கட்டியுங்குறையாச்சு.
ஆயிரத்திலொருவனேஅலங்காரபுருடன்.
ஆயிரம்வந்தாலும்ஆபத்தொழிலாகாது.
ஆயிரம்நட்சத்திரங்கூடினாலும்ஒருசந்திரனாகாது.
ஆயிரங்காக்காய்க்குள்ளொருஅன்னம்அகப்பட்டதுபோல.
ஆயிரங்கட்டுஅண்டத்தைத்தாங்கும்.
ஆயிரங்கட்டுஆனைப்பலன்.
ஆயிரக்கலநெல்லுக்கோரந்துப்பூச்சிபோதும்.
ஆயிரஞ்சொன்னாலும்அவசாரிசமுசாரியாகாள்.
ஆயிரம்வருடஞ்சென்றுசெத்தாலும்அநீதச்சாவு.
ஆயிரம்பேரைக்கொன்றவனரைவயித்தியன்.
ஆயிரம்வந்தாலும்ஆத்திரமாகாது.
ஆயிரஞ்சொல்லுக்குஅரையெழுத்து. [து
ஆயிரம்பேர்கூடினாலும்ஒருஅந்துப்பூச்சியைக்கொல்லக்கூடா
ஆயிரம்பொன்போட்டு யானைவாங்கி அரைப்பணத்தங்குசத்து
ஆயிரம்அரைக்காற்பணம். [க்குபால்மாறுகிறதா.
ஆயிரத்திலேபிறந்துஐந்நூற்றிலேகால்நீட்டினதுபோல.
ஆயிரம்பசுக்களில்ஒருபசுவுதைத்துக்கொண்டால்நஷ்டமா.
ஆயுதபரிட்சையறிந்தவன்நூற்றிலொருவன்.
ஆயோதனமுகத்திலாயுதந்தேடுகிறதுபோல.
ஆய்ந்தோய்ந்துபாராதான்தான்சாவக்கடவன்.
ஆரணியமான அழகாபுரிக்கு ஒரு கோரணியான குரங்குவந்து
ஆரம்பசூரத்துவம். [தோன்றிற்று.
ஆரடாவிட்டதுமானியம்நானேவிட்டுக்கொண்டேன்.
ஆராருக்குநானுவேன்ஆகாதஉடம்பையும்புண்ணையுங்கொண்டு
ஆராத்தாள்செத்தாலும்பொழுதுவிடிந்தால்தெரிகிறது.
ஆராற்கெட்டேன்நோராற்கெட்டேன்.
ஆரியக்கூத்தாடினாலுங்காரியத்திலேகண்வேண்டும்.
ஆருமற்றதேதாரம்ஊரிலொருவனேதோழன்.
ஆருக்குமஞ்சான்ஆர்படைக்குந்தோலான்.
ஆருக்கார்சதம்.

ஆருமில்லாதஊரிலேஅசுவமேதயாகஞ்செய்வான்.
ஆருக்காகிலுந் துரோகஞ்செய்தால் ஐந்தாறுநாட் பொறுத்துக்
கேட்கும்ஆத்துமத்துரோகஞ்செய்தால்அப்போதேகேட்கும்
ஆருமற்றதேதாரம்ஊரிலொருவனேதோழன்.
ஆரைநப்பித்தோழாகாருக்கேற்றம்போட்டாய்.
ஆர்குடிகெடுக்கஆண்டிவேஷம்போட்டாய்.
ஆர்குற்றினாலும்அரிசியாவதொன்று.
ஆர்கடன்வைத்தாலும்மாரிகடன்வைக்கக்கூடாது.
ஆலகாலவிஷம்போலொத்தவன்அந்தரமாவான்.
ஆலமரம்பழுத்ததென்றுபறவைக்கார்சீட்டனுப்பினார்கள்.
ஆலும்வேலும்பல்லுக்குறுதிநாலும்ரெண்டுஞ்சொல்லுக்குறுதி
ஆலயமறியாதுஓதியவேதம்.
ஆலயந்தொழுவதுசாலவுநன்று.
ஆலைக்கரும்பும்வேலைத்துரும்புமானேன்.
ஆலையில்லாவூரிலேஇலுப்பைப்பூசருக்கரை.
ஆல்பழுத்தாலங்கேயரசுபழுத்தாலிங்கே.
ஆல்போலேவிழுதுவிட்டுஅறுகுபோலவேரோடி.
ஆவல்மாத்திரமிருந்தாலென்னஅன்னமிரங்கினாலல்லோபிழை
ஆவணிமாதம்அழுகல்தூற்றல். [ப்பான்.
ஆவாரையிலையும்ஆபத்துக்குதவும்.
ஆவுந்தேவும்ஐந்துவருஷத்திலேபலனீயும். [விடு.
ஆழமறியாமல் காலிட்டுக்கொண்டேன்அண்ணாமலையப்பாகாலை
ஆழாக்கரிசி மூழாக்குப்பானை முகவியார்வருகிற வீறுப்பைப்
ஆணில்லாததுக்கம்அழுதாலுந்தீராது. [பாரு
ஆளுக்கொருகுட்டுக்குட்டினால்அடியேன்றலைமொட்டை.
ஆளையாள்குத்தும்ஆள்மிடுக்குப்பத்துப்பேரைக்குத்தும்.
ஆளைப்பார்த்தான்வாயாலேய்த்தான்.
ஆறும்பேறுபெண்ணாய்ப்பிறந்தால்ஆறுனகுடித்தனம்தீறுய்வி
ஆறினகஞ்சிபழங்கஞ்சி. [டும்.
ஆறினபுண்ணிலும்அசடுநிற்கும்.
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு.
ஆறினலச்சிலேவாருஆறுவிட்டால்பிடாவிலேவாரு.
ஆறுகலியாணம் மூன்றுபெண்டுகள் மாரோடுமார்தள்ளுகிறது.
ஆறுகாதமென்னச்சேகோவணத்தையவிழ்ப்பானேன்.
ஆறுகெடநாணலிடுஊர்கெடநூலையிடு.
ஆறுநீந்தினவனுக்குவாய்க்காலெவ்வளவு.

ஆறுபோவதேகிழக்கு அரசன்சொன்னதேவழக்கு.
ஆறுவடிவிலேயுங்கருப்புத்தெளிவிலேயும்வருத்தம்.
ஆற்றிலேஒருகாலுஞ்சேற்றிலேஒருகாலுமாயிருக்கிறான்.
ஆற்றிற்கரைத்தபுளியும் அங்காடிக்கிட்டபசருமானேன்.
ஆற்றுதேஎன்னைத்தேற்றுதேஅம்பலத்திலேஎன்னையேற்றுதே யென்கிறான்.
ஆற்றுநீரைநாய்நக்கிக்குடிக்குமோஎடுத்துக்குடிக்குமோ.
ஆற்றிலேவிட்டதெப்பைப்போல்தவிக்கிறேன்.
ஆற்றித்தூற்றிஅம்பலத்தில்வைக்கப்பார்க்கிறான்.
ஆற்றிலேபோகிறதண்ணீரைஅப்பாகுடிஐயாகுடி.
ஆற்றிலேபோட்டாலும்அளந்துபோடவேண்டும்.
ஆற்றுக்குப்பார்ப்பான்துணையாசோற்றுக்குப்பைத்தேங்காய்க
ஆனதல்லாமல்ஆவதுமறிவாரோ. [றியா
ஆனமுதலையழித்தவன்மானமிழப்பதரிதல்ல. [றேன்.
ஆனமட்டும் ஆதாளியடித்துப்போட்டு ஆந்தைபோல் விழிக்கி
ஆனால்அச்சிலேவார்க்கிறேன் ஆகாவிட்டால்மிடாவிலேவார்க்கி
ஆனால்சோமவாரம்ஆகாவிட்டால்ஆதிவாரம். [றேன்.
ஆனானதெய்வத்தையாறுகொண்டுபோகிறது அனுமந்தராயனு
ஆனிஆனைவாலொத்தகரும்பு. [க்குத்தெப்பத்திருவிழா
ஆனிஅரையாறுஆவணிமுழுஆறுவெள்ளம்வரத்து.
ஆனிஅடியிடாதேகூனிகுடிபோகாதே.
ஆனையேறியுஞ்சந்துவழிநுழைவானேன்.
ஆனைக்குஅறுபதுமுழம்அறக்குள்ளனுக்கெழுபதுமுழம்.
ஆனைக்கும்பானைக்குஞ்சரி.
ஆனைகண்டபிறவிக்குருடர்அடித்துக்கொள்ளுகிறதுபோல.
ஆனைகட்டத்தாள்வானமுட்டப்போர் ஆறுகொண்டதுபாதி தூ றுகொண்டதுபாதி.
ஆனை[illegible]ணாமற்போனால்குண்டுசட்டியிற்றேடினாலகப்படுமா.
ஆனைவிழுந்தாலுங்குதிரைமட்டம்.
ஆனைக்கும்அடிசறுக்கும்.
ஆனைதன்றலையில்மண்ணைக்கொட்டிக்கொண்டதுபோல.
ஆனைக்குத்தீனியிடும்வீட்டில்ஆட்டுக்குட்டிக்குப்பஞ்சமா.
ஆனைகேடுஅரசுகேடுஉண்டோ.
ஆனையைக்கட்டிசுளகாலேமறைப்பாள்.
ஆனைவேகமடங்கும்அங்குசத்தினால்.
ஆனையைவிற்றுத்துறட்டிக்குமன்றாடுகிறான்.

ஆனைகட்டச்சங்கிலியைத்தானேகொடுத்ததுபோல.
ஆனைபார்க்கவெள்ளெழுத்தா.
ஆனையசைந்துதின்னும்வீடுஅசையாமற்றின்னும்.
ஆனைகறுத்திருந்தும்ஆயிரம்பொன்.
ஆனைக்கூட்டத்திற்சிங்கம்புகுந்ததுபோல.
ஆனைவிழுங்கியம்மையாருக்குப்பூனைசுண்டாங்கியா.
ஆனையுண்டவிளாங்கனிபோல.
ஆனைதூரத்திவந்தாலும்ஆலயத்தில்நுழையலாகாது.
ஆனைக்குத்தேனாயூன்இனாயிட்டதுபோல.
ஆனைக்கில்லைகாணலும்மழையும்.
ஆனையைக்குத்திச்சுளகாலேமறைக்கலாமா.
ஆனைகுத்துந்தோட்டிக்குப்பிணக்கா.
ஆனைவிழுந்தாற்கொம்புபுலிவிழுந்தாற்றோல்.
ஆனைமேயுங்காட்டில்ஆட்டுக்குமேயவிடமில்லை.
ஆனையுமறுகம்புல்லினாற்றடைப்படும்.
ஆனைகேட்டவாயால்ஆட்டுக்குட்டிகேட்கிறதா. [யேறலாமா
ஆனைவால்பிடித்துக்கரையேறலாம் ஆட்டின்வால்பிடித்துக்கரை
ஆனையாயிரம்பெற்றால்அடியுமாயிரம்பெறுமா.
ஆனையிருந்துஅரசாண்டவிடத்திலே பூனையிருந்துபுலம்பியழு
ஆனைக்கொருகாலம்பூனைக்கொருகாலம். [கிறது.
இகழ்ச்சியுடையோன்புகழ்ச்சியடையான்.
இக்கரையில்பாகலைப்போட்டுஅக்கரையிலேகொழுகொம்புவை
இச்சைசொல்யாசகத்தால்இடர்பட்டவனில்லை. [க்கிறான்.
இச்சித்தகாரியம்இராசியமல்லவோ.
இஞ்சிதின்னகுரங்குபோலபஞ்சரிக்கிறான்.
இடதுகைக்குவலதுகைதுணைவலதுகைக்குஇடதுகைதுணை.
இடக்கனுக்குவழியெங்கேகிடக்கிறவன்தலைமேலே.
இடங்கொடுத்தால்மடம்பிடுங்குவான்.
இடம்வலந்தெரியாதவனோடிணக்கம்பண்ணக்கூடாது.
இடிக்குக்குடைபிடிக்கலாமா.
இடிகொம்புக்காரன்கோழிகுசுச்சத்தத்துக்கஞ்சுமா.
இடுவான்இடுவாளென்றுயேக்கற்றிருந்தாளாம்நாழிநெல்லுகொடுத்துநாலாசைதீர்த்தாளாம்.
இடுவதுபிச்சைபெறுவதுமோட்சம்.
இடுகிறவன்றன்னவனானால் இடைப்பந்தியிலிருந்தாலென்ன கடைப்பந்தியிலிருந்தாலென்ன.

இடுகிறதெய்வம்எங்குமிடும்.
இடும்புசெய்வார்க்குஇராப்பகல்நித்திரையில்லை.
இடுப்புவைத்தவிடமெல்லாம்அடுப்புவைத்தான்.
இடுவார்பிச்சையைக்கெடுவார்கெடுப்பார்
இடுப்பொடிந்தகோழிக்குஉரற்குழியேகெதி.
இடைச்சிமாப்பிள்ளைஎன்றைக்குவருவான்.
இடையூறுசெய்தோன்பனையிலிருக்காதபேய்முதலாய்.
இடையன்கெடுத்ததுபாதிமடையன்கெடுத்ததுபாதி.
இடையன்புத்திபிடரியிலே.
இடையாண்டியுங்குசத்தாதனுமில்லை.
இடைத்தெருவிற்கோலம் வரும்போதுகுசத்தெருவெங்கேயெ
இடையன்பேரிலேசாத்தான்வந்தகதைபோல. [ன்கிறாள்.
இட்டார்க்கிடனுஞ்செத்தார்க்கழனும்.
இட்டுவைத்தாற்றின்னவும்எடுத்துவைத்தாற்சுமக்கவுந்தெரியும்.
இட்டத்தின்மேலேஆசைப்பட்டாற்கிடைக்குமா.
இணங்காரோடிணங்குவதிகழ்ச்சி.
இதென்னவெள்ளரிக்காய்விற்றபட்டணமா.
இத்தனையத்தனையாமுல்அத்தனையெத்தனையாகாது. [ன்கிறது.
இத்தனைபெரியவன் கையைப்பிடித்தால் எப்படிமாட்டோமெ
இந்திரனைச்சந்திரனை இலையாலே மறைப்பாள் இமதருமராசா
வைக்கையாலேமறைப்பாள்.
இந்தக்கூழுக்காஇருபத்தெட்டுநாமம்.
இந்தப்பூனையும்பால்குடிக்குமா.
இந்தப்பெருமையும்பந்தலழகும்பார்த்தையாபண்ணைக்காரா.
இயற்கைவாசனையோசெயற்கைவாசனையோ.
இரக்கமில்லாதான்நெஞ்சுஇரும்பினுங்கொடிது.
இரவற்சோறுபஞ்சந்தாங்காது.
இரண்டுநாய்க்கொருஎலும்புபோட்டாப்போலிருக்குது.
இரவல்துணியாம்இரவல்தட்டாம்இழுத்துக்கொட்டுமேளத்தை
இறுவக்கட்டுதாலியை.
இரவலுடைமை பிசைவாயிருக்கிறது என்பிள்ளையானை நான்
கொடுக்கமாட்டேன்.
இரவல்சதமாதிருடனுறவா.
இரண்டுபட்டவூரிற்குரங்குங்குடியிராது.
இரண்டுதோணியிலகால்வைக்கிறதா.
இரந்தும்பருந்துக்கிடு.

இரக்கப்போனாலும்பரக்கப்போகவேண்டும்.
இரப்பான்சோற்றுக்குளெப்போதும்பஞ்சமில்லை.
இராகுதசையில்வாழ்ந்தவனுமில்லை இராசதசையில்கெட்டவனு
இராவணன்குடிக்குமசோதரன்போலும். [மில்லை.
இராப்பட்டினிகிடந்தவன் அகவிலை கேட்பானோ.
இராமனைப்போல ராஜாவிருந்தால் அனுமானைப்போல சேவக
இராமரிருந்தவிடம்அயோத்தி. [னிருப்பான்
இராஜமுகத்துக்குளெலுமிச்சம்பழம்போல.
இராமேசுரத்துக்குப்போயுஞ்சனிபீசரன்றொலையவில்லை.
இருந்தல்லோபடிக்கவேணும்.
இரும்பைளவிகவ்விச்செல்கிறான்படுக்காளி.
இருமனமுமங்கைபோடிணங்குவதவம்.
இருந்துபணங்கொடுத்துநடந்துவாங்கவேண்டியதாயிருக்குது.
இருக்கவேண்டுமென்றால்இருப்பைத்தின்னு.
இரும்புசெம்பானால்திரும்பிப்பொன்னாகும்.
இருப்புத்தூணைச்செல்லரிக்குமா.
இருளுமொருகாலம்நிலவுமொருகாலம்.
இருப்புக்கட்டியைக்காற்றடிக்கிறபோது இலவம்பஞ்செனக்கெ
ன்னபுத்தியென்கிறதாம்.
இரும்படிக்கிறஇடத்தில்நாய்க்கென்னகிடைக்கும்.
இருளன்பிள்ளைக்குளவிக்குஞ்சுபஞ்சமா.
இருட்டுவீட்டுக்குட்போனாலுந்திருட்டுக்கைபோகாது.
இருளன்ராஜமுழிமுழிப்பானா.
இருதலைக்கொள்ளியெறும்புபோலானேன்.
இருட்டுவேலையோகுருட்டுவேலையோ.
இரும்புபிடித்தகையுஞ்சிரங்குபிடித்தகையுஞ்சும்மாயிராது.
இருந்தவன்றலைமேலேஇடிவிழுந்ததுபோலே.
இருந்தகால்மூதேவிநடந்தகாலஸ்ரீதேவி. [போகாதோ.
இரும்பைக்கரையானரித்தால் பிள்ளையைப் பருந்து கொண்டு
இருக்கிறவன்செவ்வையாயிருந்தால் சிரைக்கிறவன் செவ்வையா
ய்ச்சிரைப்பான்.
இருந்தவனெழுந்திருக்கிறதற்குள்ளே நின்றவனெடுந்தூரம்.
இருவருமொத்தாவிணக்குவாரேன்.
இலங்கையில்பிறந்தவனெல்லாம்இராவணனுவதில்லை.
இலக்கணங்கற்றவன்கலக்கமறமன்னர்சபைகாண்பான்.
இலங்கணம் பரமௌஷதம்.

இலவுகாத்தகிளியானேன்.
இலையும்பழுப்பும்எங்குமுண்டு.
இலைதின்னிகாயறியான்.
இல்லாதுபிறவாது அள்ளாதுகுறையாது.
இல்லையென்றவீட்டிற்பல்லியுஞ்சேராது.
இவன்வாழ்ந்தவாழ்வுமறுகிலேன்மல்லாக்கிலேன்.
இவன்மகாப்பெரிய கள்ளன் காலாலேமுடிஞ்சதைக்கையாலே
[அவிழ்க்கிறதுஅரிது.
இவனுக்குச்சொல்லும்புத்தி கடலில் பெருங்காயங் கரைத்தாப்
[போலிருக்குது.
இவன்கல்லாதுகற்றவன்உள்ளங்கையில் வைகுண்டங்காட்டுவான்.
இவள்விலைமோரிலே வெண்ணெய் எடுத்து தலைமகனுக்குக்கலி
யாணம்பண்ணுவாள்.
இவனுக்கும்அவனுக்கும்ஏழுபொருத்தம்.
இவன்புத்திஉலக்கைக்கொழுந்து.
இழவுக்குவந்தவள்தாலியறுப்பாளா.
இழுக்குடையபாட்டுக்கிசைநன்று.
இழுவைகண்டால்அடிபார்ப்பானேன்.
இழையாயிரம்பொன்பெற்றஇந்திரவண்ணப்பட்டு.
இளவெய்யில்காயாதநீயாதீபாயப்போகிறாய்.
இன்பத்திலாசைஎவர்க்குமுண்டு.
இளங்கன்றுபயமறியுமா.
இளைஞருஞனும்ஆடுவான்கூப்பு.
இளையாளேவாடிமலையாளம்போவோம்மூத்தாளேவாடிமுட்டி
[க்கொண்டுசாவோம்.
இளைத்தவன்எள்ளைவிதை.
இறங்கச்சேதித்தானால்கரையேறுகிறதெப்படி.
இறந்தவன்பிள்ளைஇருந்தவனடைக்கலம்.
இறக்குங்காலம்வந்தால்பிறக்கும்ஈச்செற்குச்சிறகு.
இறைச்சிதின்றாலும் எலும்பைக்கோத்துப் போட்டுக்கொள்ள
[லாமா.
இறைத்தகிணறுஊறும்.
இனம்பிரிந்தமான்போல.
இன்றைக்காகிறதுநாளைக்காகட்டும்.
ஈகையுடையோன்எக்களிப்படைவான்.
ஈக்குவிடந்தலையில்தேளுக்குகொடுக்கில்.
ஈசலிறகுஎல்லாவற்றிலுமிருது.
ஈசல்மடிஞ்சாற்போலமாண்டுதேசேனை.
ஈசல்பொறுக்கிபேசவுமறியான்.

ஈசனுக்கொப்புஇங்கொன்றுஇல்லை.
ஈசற்பெரும்போக்கில்தவளைதத்திவிழுங்குது.
ஈச்சங்கள்ளுளதிலுங்குளிர்த்தி.
ஈச்சமுள்ளாலேயிருவாயுந் தைத்தாலுந்தேங்காய்க்குமஞ்சளில்
லைபூவுக்குமணமில்லையென்கிறாள்.
ஈடன்பாடஞ்சான்கூழையெருதுநுளம்பஞ்சாது.
ஈடாகாதவனையெதிராக்காதே.
ஈட்டுக்கீடுஞ்சோட்டுக்குச்சோடுமாயிருந்தால்வாசி.
ஈட்டுக்கும்பாட்டுக்கும்இருந்தாள்இடுகுமரி.
ஈட்டியெட்டினமட்டுங்குத்தும் பணம்பதின்காதமுங்குத்தும்.
ஈதலுடையோனையாவரும்புகழ்வார்.
ஈந்துபார்த்தால்இம்பிவெளியாகும்.
ஈப்பிசினிஇரப்பதுகூடகக்கிசம்.
ஈயாதபுல்லனைவிடத்திலுங்காணோம்.
ஈயார்தேட்டைத்தீயார்கொள்ளுவர்.
ஈயைப்பிடித்தால்கைவேறுகால்வேறு.
ஈரநாவிற்கெலும்பில்லை.
ஈரவெங்காயத்திற்குஇருபத்தெட்டுப்புணா.
ஈனாப்பேனுக்கிப்பிள்ளைப்பெருமாளாக்கினேன்.
உகிர்ச்சுற்றின்மேல்அம்மிவிழுந்ததுபோல.
உங்களுறவிலேவேகிறதுஒருகட்டுவிறகிலேவேகிறது.
உடம்புளைந்தகழுதைஉப்புக்களத்திற்குப்போனதுபோல.
உடம்பெடுத்தவனெல்லாம்ஒடெடுத்தான்.
உடலொருவனுக்குப்பிறந்ததுநாப்பலருக்குப்பிறந்தது.
உடாப்புடைவைபூச்சிக்கிரை.
உடும்புபோனாலும்போகிறதுகையைவிட்டாற்போதும்.
உடும்புக்கிரண்டுநாக்கு.
உடைமையும்வறுமையும்ஒருவழிநில்லாது.
உடையவன்சொற்படிஉரலைசுற்றிக்களைபறி.
உடையவன்பாராப்பயிருருப்படுமா.
உடையவனில்லாச்சேலைஒருமுழங்கட்டை.
உட்சாந்தல்லவோபடுக்கவேண்டும்.
உட்காந்தவனைக்கட்டமாட்டாதவன்ஓடுகிறவனைக்கட்டுவானா.
உட்சுவரிருக்கப்புறச்சுவர்பூசலாமா. [பெருமாள்செட்டி.
உண்பான்தின்பான் நயனப்பசெட்டி உடன்கட்டையேறுவான்
உண்ணவாவென்றால்குத்தவருகிறாய்.

உன்னைக்கையறுத்து சுண்ணாம்புக்குறியிடுவேன்.
உண்ணாச்சொத்துமண்ணாய்ப்போகும்.
உண்ணாமல்ஊரெல்லாந்திரியலாம் உடுக்காமல் ஒருவீட்டுக்கும்
உண்ணுங்கிளையிலேநண்ணும்புல்லுருவி. [போகலாகாது.
உண்டவயிற்றுக்குச்சோறும்மொட்டந்தலைக்கெண்ணெயுமா.
உண்கிறசோற்றிலேநஞ்சைகலக்கிறதா.
உண்டஉடம்புருகுந்தின்றபாக்குச்சிவக்கும்.
உண்டவனுரஞ்செய்வான்.
உண்டவீட்டுக்கிரண்டகம்பண்ணலாமா.
உண்டதுதானேப்பம்வரும்.
உண்டார்மேனிகண்டாற்றெரியும்.
உண்டுஉறியிலிருவென்றால்உருண்டுதரையில்விழுகிறாய்.
உண்டுதின்றுஉயரமானால்ஊரிலேகாரியமென்ன. [முஷ்டி.
உண்பான்றின்பான் சிவப்பிராமணன் குத்துக்குநிற்பான்வீர
உண்பாரைப்பார்த்தாலும்உழுவாரைப்பார்க்கலாகாது.
உதட்டிலேவாழைப்பழம்உள்ளேதள்ளுவாருண்டோ.
உதட்டுத்துரும்புஊதப்போதாது.
உதவாப்பழங்கலமேஓசையில்லாவெண்கலமே.
உதவாசெட்டிக்குச்சீட்டெழுதினதுபோல.
உதறுகாலிவந்தாள்உள்ளதுங்கெடுத்தாள்.
உதாரிக்குப்பொன்துரும்பு.
உதைப்பானுக்குவெளுப்பான்சாதிவண்ணான்.
உதைத்தகால்புழுக்கிறதற்குமுன்னே அடிவயிறு சீழ்க்கட்டுகிற
உத்தமனுக்குத்தப்பிலிக்கும்உடன்படிக்கைவேண்டாம். [து.
உத்தியோகம்புருஷலக்ஷணம்.
உத்தியோகத்துக்குத்தக்கசுகம்.
உபசரியாதவீட்டிலே உண்ணாதிருப்பதே ஒருகோடிதனம்.
உப்பிருந்தபாண்டமும்உபாயமிருந்தநெஞ்சுந்தட்டி உடையா
உப்பில்லாப்பண்டங்குப்பையிலே. [மற்றானேயுடையும்.
உப்பிட்டவர்களைஉள்ளளவும்நினை.
உப்புத்தின்றவன்தண்ணீர்குடிப்பான்.
உப்புவாணிபனறிவானோகர்ப்பூரவிலை.
உப்புக்கட்டினால்உலகங்கட்டும்.
உப்பைச்சிந்தினையோதுப்பைச்சிந்தினையோ.
உப்பைத்தொட்டுஉரல்விழுங்குகிறதுபோல.
உப்போடொன்பதும்பருப்போடுபத்தும்வேண்டும்.

உருவேறத்திருவேறும்.
உலகம்பலவிதம்.
உலக்கைப்பூசைக்கசையாததுதிருப்பாட்டுக்கசையுமா.
உலக்கைதேய்ந்துஉளிப்பிடியாயிற்று.
உலைவாயைமூடினாலும்ஊர்வாயைமூடலாமா.
உழவொழிந்தமாடுபட்டிப்புறத்திலே.
உழவிற்கேற்றகொழு.
உமக்கென்னவயதுக்குநரைத்ததோமயிருக்குநரைத்ததோ.
உயரஉயரப்பரந்தாலும்ஊர்க்குருவிபருந்தாகுமா.
உயிரிருந்தால்உப்புமாறித்தின்னலாம்.
உயிரோடுதிரும்பிப்பாராதவர்செத்தால்முத்தங்கொடுப்பாரா.
உயிரோடொருமுத்தம்தாராதவள் செத்தாலுடன்கட்டையேறுவாளா.
உரலுக்குப்பஞ்சமுண்டா.
உரலிலேதலையைமாட்டிக்கொண்டுஉலக்கைக்குப்பயப்பட்டால்தீருமா.
உரல்போய்மத்தளத்தோடுமுறையிட்டதுபோல.
உரிசைகண்டபூனைஉறியையுறியைத்தாவுமாம்.
உருக்கமுள்ளசிற்றாத்தைஒதுக்கில்வாடிகட்டியழ.
உருட்டும்புரட்டும்ஒடுக்குஞ்சிறப்பை.
உருத்திராட்சப்பூனையுபதேசம்பண்ணினதுபோல.
உழவுக்குஒருசுற்றும்வாராதுஉள்ளனுக்குப்பம்பரம்.
உழக்குஉற்றார்பதக்குப்பரதேசி.
உழக்கிலேகிழக்குமேற்கா.
உழக்குமிளகுகொடுப்பானேன் ஒளித்திருந்துமிளகுநீர்குடிப்பானேன்.
உழுகிறநாளையிலூருக்குப்போய் அறுக்கிறநாளையி லரிவாள்கொண்டுவந்தாற்போல.
உழுகிறவன்கணக்குப்பார்த்தால்உழக்கோலுமிஞ்சாது.
உறவனில்லாமல்ஊரழியுமா.
உள்ளானுங்கள்ளனுங்கூடினால் விடிகிறமட்டுந்திருடலாம்.
உள்ளத்தைச்சொன்னால்நொள்ளைக்கண்ணிக்குநோப்பாளம்.
உள்ளங்கையிலஞ்சுகொண்டைமூடிக்கிறேன்.
உள்வீட்டுக்கடனும்உள்ளங்கைச்சிரங்குங்கெட்டது.
உள்ளங்கையிலேவைகுண்டங்காட்டுகிறேன்.
உள்ளவன்பிள்ளை யுப்போடுண்ணும் இல்லாதவன்பிள்ளை சீனியோடுண்ணும்.
உள்ளக்கருத்துவள்ளலுக்குத்தெரியும்.
உள்ளத்தைச்சொன்னவன் ஊருக்குப்பொல்லாதவன்.
உள்ளூறக்கொட்டினதேளே ஒருமந்திரஞ் சொல்லுகிறேன்கேளே.

உள்ளூர்மருமகனும் உழுகிறகடாவுஞ்சரி.
உள்ளபகையும்உசட்டிலுறவும்.
உள்ளேவயிறெரிய உதடுபழஞ்சொரிய.
உறவுபோலவிருந்து குளவிபோலக்கொட்டுகிறது.
உறவிலேநஞ்சுகலக்கிறதா.
உறவுதான்பயிரிலேகைவையாதே.
உறியிலேதயிரிருக்கஊரெங்கும்வெண்ணெய்க்கலைவானேன்.
உறியிற்பணம்போய்த் தெருவுச்சண்டையையிழுக்கிறது.
உற்றார்தின்றால்புத்தாய்விளையும் ஊரார்தின்றால்பேராய்விளை
உற்சாகஞ்செய்தால்மச்சைத்தாண்டுவான். [யும்.
உற்றதுசொன்னாலற்றதுபொருந்தும்.
உற்றாருக்குஒன்றுகொடேன்நமனாருக்குநாலுகொடுப்பேன்.
ஊசலாடித்தன்னிலையில்நிற்கும்.
ஊசிஒருமுழத்துணியாவதுகொடுக்கும் உற்றாரென்னகொடுப்
ஊசிபோலமிடறும்தாழிபோலவயிறும். [பார்
ஊசிகொள்ளப்போய்த்துலாக்கணக்குப்பார்க்கிறதா.
ஊசிக்குக்கள்ளன்உடனேயிருப்பான்.
ஊணற்றபோதேயுறவற்றது.
ஊணன்கருமமிழந்தான்உளுத்தன்பேரிழந்தான்.
ஊணினாற்புத்திபூணினாற்சாதி.
ஊணுமில்லையுறக்கமுமில்லை.
ஊணுக்குமுந்தவேண்டும்கோளுக்குப்பிந்தவேண்டும்.
ஊண்பாக்கொழியவீண்பாக்காகாது.
ஊதவறிந்தவன்வாதிஉப்பறிந்தவன்யோகி.
ஊதுகிறசங்குஊதினால்விடிகிறபொழுதுவிடிகிறது.
ஊத்தைபோனாலும்உள்வினைபோகாது.
ஊத்தைவாயன்தேடக்கர்ப்பூரவாயன்தின்ன.
ஊத்தைப்பல்லுக்குவிளாங்காய்ச்சேர்ந்ததுபோல.
ஊத்தைபோகக்குளித்தவனுமில்லை பசிபோகத்தின்றவனுமில்
ஊமையுமல்லசெவிடுமல்ல. [லை.
ஊமைக்குக்குளறுவாயன்உற்பாதபிண்டம்.
ஊமையூராக்கெடுக்கும்ஆமைகிணற்றைக்கெடுக்கும்.
ஊமைகண்டகனா.
ஊராருடைமைக்குப்பேயாப்பறக்கிறான்.
ஊராளுகிறவனுக்குப்பேலப்பிழக்கடையில்லையா.
ஊராரேவாருங்கள்முதுகுநீர்குத்துங்கள்.

ஊராரொருமைபால்கறக்கிறது நீபுழுட்டுகிறாய் நானுமுன்னுடி
ஊரிளக்காரம்வண்ணானுக்குத்தெரியும். [றேன்.
ஊரிலேகண்ணாலம்மார்பிலேசந்தனம்.
ஊரிருக்கிறதுஓடிருக்கிறது.
ஊரிரண்டுபட்டால்கூத்தாடிக்குக்கொண்டாட்டம்.
ஊருக்கெல்லாம்ஒருவழியுனக்கொருவழியா,
ஊருக்குப் பால்வார்த்துண்கிறாயா உடம்புக்குப் பால்வார்த்து
ஊருக்காகாதுவீட்டுக்குமாகாது. [ண்கிறாயா.
ஊருக்கொம்மல்வீட்டுக்குவயிற்றெரிச்சல்.
ஊருக்கொருதேவடியாள்ஆருக்கென்றுவேன்.
ஊருக்கிளைத்தவன்பிள்ளையார்கோயிலாண்டி.
ஊரெல்லாஞ்சுற்றியெனக்கென்னபுத்தி.
ஊரொன்றிருந்தாற்பறைச்சேரியுமிருக்கும்.
ஊரைஉழக்காலளக்கிறாள்நாட்டைநாழியாலளக்கிறாள்.
ஊரைப்பார்க்கச்சொன்னால்பறைச்சேரியைப்பார்க்கிறான்.
ஊரோடஒக்கவோடுநாட்டோடநடுவோடு.
ஊரோச்சம்வீடுபட்டினி.
ஊர்க்கோழியும்நாட்டுக்கோழியுங்கூடி உரல்புழுங்கரிசிக்குச்சே
ஊர்க்குருவிமேலேராமபாணந்தொடுக்கிறதா. [தம்.
ஊர்கூடிச்செக்குத்தள்ளவேண்டும்.
ஊர்வாயைமூடஉலைமூடியுண்டா.
ஊழிபேரினும்ஊக்கமதுகைவிடேல்.
ஊழும்உற்சாகமும்ஒத்துக்கொள்ளவேண்டும்.
ஊன்றக்கொடுத்ததடியுச்சியைபுடைக்கிறது.
எங்குமடமாயிருக்கிறதுஇருக்கத்தானிடமில்லை.
எங்கேபடித்தாலும்நாய்க்குக்காலிலேமூடம்.
எங்கேபுகையுண்டோஅங்கேநெருப்புண்டு.
எச்சிலைக்குடித்துத்தாகந்தீருமா.
எச்சிற்கலைக்குமண்ணாங்கட்டியாதரவு மண்ணாங்கட்டிக்குஎச்சிற்
எச்சிலிறக்கடிக்கும்பற்றுப்பறக்கடிக்கும். [கலையாதரவு.
எச்சிற்கையால்காக்கையோட்டாதவன்.
எச்சிலெடுக்கச்சொன்னார்களா எத்தனைபேர்சாப்பிட்டதென்று கேட்கச்சொன்னார்களா.
எச்சிற்றின்றாலும் வயிறு நிறையத் தின்னவேண்டும் எச்சுக்கெட்டாலும்பொழுதுவிடியமட்டும்கேட்கவேண்டும்.

எடுத்தாலும்பங்காருப்பெட்டியை யெடுக்கவேண்டும் இருந்தா
லுஞ்சிங்காரக்கூழுவிலிருக்கவேண்டும்.
எடுத்தசுமைசுமந்தல்லோயிறக்கவேண்டும்.
எடுத்தாளாதபொருள்உதவாது.
எடுப்பாரும்பிடிப்பாருமுண்டானாலிளைப்புந்தவிப்புமுண்டு.
எடுப்பார்கைக்குழந்தை.
எட்டாப்பழத்தைப்பார்த்துக்கொட்டாவிட்டதுபோல.
எட்டாப்பூத்தேவருக்கு.
எட்டாம்பேறுபெண்பிறந்தால் எட்டிப்பார்த்தவீடுகுட்டிச்சுவ
எட்டிக்குட்டிஇறங்கிக்காலைப்பிடித்துக்கொள்கிறது. [ர்.
எட்டிபழுத்தென்னஈயாதார்வாழ்ந்தென்ன.
எட்டிமரமானாலும்பச்சென்றிருக்கவேண்டும்.
எட்டியுடனேசேர்ந்தஇலவுந்தீப்பட்டது.
எட்டினால்சிகையைப்பிடிக்கிறது எட்டாவிட்டால் காலைப்பிடிக்
எட்டுக்குஞ்சடித்தாலுஞ்சட்டிக்கறியாகாது. [கிறது.
எட்டுவருஷத்துஎருமைக்கடா ஏரிக்குப்போகவழிதேடுகிறது.
என்சாணுடம்பஞ்சாணானேன்.
என்சாணுடம்பிலேயெள்ளத்தனை இரத்தமில்லை.
என்சாணுடம்பிற்குஞ்சிரசேயிரதானம்.
எண்ணமெல்லாம்பொய்எமனோலைமெய்.
எண்ணறக்கற்றுஎழுத்தறவாசித்தாலும்பெண்புத்திபின்புத்தி.
எண்ணிச்செய்கிறவன்செட்டிஎண்ணாமற்செய்கிறவன்மட்டி.
எண்ணிச்செய்வதுசெட்டுஎண்ணாமற்செய்வதுவெள்ளாண்மை.
எண்ணியவெண்ணை மென்னடி அண்ணுவென்றழைத்த மூறை
எண்ணெய்முந்துதோதிரிமுந்துதோ. [யென்னடி.
எதார்த்தவாதிவெகுசனவிரோதி.
எதிரியெளப்பமானாற்கோபஞ்சண்டப்பிரசண்டம்.
எதிர்த்தும்மல்எடுத்துக்கொடுக்கும்.
எதெப்படிப்போனாலுந்தன்காரியந்தனக்கு.
எத்தனைதரம்அலக்கினாலும்பித்தளைநாற்றம்போகுமா.
எத்தனைபுடமிட்டாலும்இரும்புபசும்பொன்னாகாது.
எத்தனையேழையானாலும்எலுமிச்சங்காயத்தனை பொன்னில்லா
எத்தாற்பிழைக்கலாம்ஒத்தாற்பிழைக்கலாம். [மற்போமா.
எத்திலேபிள்ளைபெற்றுஇரவலிலேதாலாட்டுகிறது.
எந்தஆயுதமுந்தீட்டத்தீட்டக்கூர்.
எந்தஇலைஉதிர்ந்தாலும்ஈச்சனிலைஉதிராது.

எந்தப்புத்திலேஎந்தப்பாம்பிருக்கிறதோ.
எந்தவாக்கும்பொய்த்தாலுஞ்சந்தவாக்குப்பொய்யாது.
எய்தவனிருக்க அம்பைநோவானேன்.
எரிகிறகொள்ளியையேறத்தள்ளினதுபோல.
எரிகிறகொள்ளியிலேஎந்தக்கொள்ளிநல்லகொள்ளி.
எரிகிறதைப்பிடுங்கினால்கொதிக்கிறது அடங்கும்.
எரிநெருப்பையெண்ணெய்விட்டவிக்கலாமா.
எரிகிறநெருப்பில்நெய்விடலாமா.
எரிகிறவீட்டையவிக்கக்கிணறுவெட்டநாட்பார்த்ததுபோல.
எரிகிறவீட்டிற்பிடுங்கிறதுலாபம்.
எருதுநோய்காக்கைக்குத்தெரியுமா.
எருதுஈன்றதென்றாற்றொழுத்திலேகட்டென்கிறதுதான்.
எருதுகூடாவிட்டால்பசுபத்தினிகொண்டாடும்.
எருதுகெட்டார்க்கும் எட்டேகடுக்காய் இளம்பிள்ளைத்தாய்ச்சிக்கும்எட்டேகடுக்காய்.
எருதுநினைத்தவிடத்திலேதோழங்கட்டுகிறதா.
எருமைக்கடாவென்றாலுங் குழந்தைக்கொரு பீர்ப்பால் கொடென்கிறாய்.
எருமைவாங்குதற்குமுன்நெய்விலைகூறுகிறதுபோல.
எருமைக்கொம்புநனைகிறதற்குமுன்னே யெழுபதுதரம்மழை [வருகிறது.
எருமைக்கோமயம்எக்கியத்திற்காகுமா.
எருமைமாட்டின்மேல்மழைபெய்ததுபோல.
எருமையிருந்தல்லோபால்கறக்கவேண்டும்.
எருமையிலும்வெள்ளாடுஏறக்கறக்குமா.
எலிக்குப்பயந்துவீட்டைச்சுட்டதுபோல.
எலிக்குப்பிராணவஸ்தைபூனைக்குக்கொண்டாட்டம்.
எலிக்குமணியம்அறுக்கிறது.
எலிதலையிலேகோடாலிவிழுந்ததுபோல.
எலிபூனையைவெல்லுமா.
எலிப்பிழுக்கைஇறப்பிலிருந்தென்னவரப்பிலிருந்தென்ன.
எலியழுதுபுலம்பினாலும்பூனைபிடித்துவிடாது.
எலியறுக்குந்தூக்கமாட்டாது.
எலியும்பூனையும்போல.
எலியைக்கண்டுபூனைபேக்கமடையுமா.
எலிவளையானாலுந்தனிவளைவேண்டும்.
எலிகட்டப்பாம்புகுடிகொள்ள.

எலுமிச்சங்காய்க்குப்புளிப்பேற்றுகிறதுபோல.
எலுமிச்சஞ்செடிக்குப்போட்டஎரு.
எலும்புகடிக்கிறநாய்இரும்புகடிக்குமா.
எல்லாமறிந்தவனுமில்லையாதுமறியாதவனுமில்லை.
எல்லாமிருக்கிறதுபெட்டியிலேலைக்கறிகடையச்சட்டியில்லை.
எல்லாருக்குஞ்சொல்லுமாம்பல்லி தான்போய்க்காடிப்பானையி
ல்விழுமாம். [து
எல்லார்தலையிலுமெட்டெழுத்துப் பாவிதலையிலே பத்தெழுத்
எல்லாருக்குஞ்சனிதுரும்புபோலஎனக்குச்சனிமலைபோல.
எல்லாரும்பாக்குஇவனொருதோப்பு.
எல்லாத்தாட்டோட்டுமென்குல்லாவுக்குள்ளே.
எல்லாருமனிதராயல்லெல்லாமாணிக்கமா.
எழுதாப்பொறிக்குஅழுதாற்றீருமா.
எழுதிவழங்கான்வாழ்க்கைகழுதைபுரண்டகளம்.
எழுத்தறிந்தமன்னன்கிழித்தெறிந்தானோலை.
எழுத்துக்குப்பால்மாறினகணக்கனும்உதட்டுக்குப் பால்மாறின
தாசியும்வருத்தமடைவார்.
எழுபதுசென்றாலும்பறையவினுற்றான்செய்யும்.
எளியவனுக்குப்பெண்டாயிருக்கிறதிலும் வலியவனுக்கடிமை
யாகிறதுநல்லது.
எளியவனைக்கண்டுபுளியங்காய்ப்பறிக்கிறான்.
எளியவன்பெண்டாட்டிஎல்லாருக்குமைத்துனச்சி.
எளியாரைவலியாரடித்தால்வலியாரைத்தெய்வமடிக்கும்.
எள்ளுக்காய்பிளந்தாற்போலப்பேசவேண்டும்.
எள்ளுக்குத்தக்கினஎண்ணெய்.
எள்ளுக்குள்ளெண்ணெய்போல.
எள்ளுக்கேழுழவுகொள்ளுக்கோருழவு. [னத்துக்குலருகிறது.
எள்ளுத்தானெண்ணெய்க் குலருகிறது எலிப்புழுக்கை யென்
எள்ளும்பச்சரிசியும்போல.
எறும்புகடிக்கப்பொறுக்காது.
எறும்புக்குக்கொட்டாங்கச்சிதண்ணீர்சமுத்திரம்.
எறும்புக்குந்தன்கையாலெண்சாண்.
எறும்பூரக்கற்குழியும்.
எறும்பூரவிடக்கொடுத்தால் எருதும்பொதியும் உள்ளேசெலுத்
எறும்பெண்ணாயிரங்கோடிக்குந்தெரியும். [துவான்.
என்குடிகெட்டதும்உன்குடிகெட்டதும்விடிந்தாற்றெரியும்.

என்வீட்டுக்குவந்தா லென்னகொண்டுவருகிறாய் உன் வீட்டுக்கு வந்தாலென்னகொடுக்கிறாய்.
